**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**S.C. NO.159/2019**

**21.09.2023 - அ.சா. 1 சாரதா மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் மாமனார் பெயர் பச்சையப்பன். அவர் 15 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். அவருக்கு மொத்தம் 5 பிள்ளைகள் அதில் ஒருவர் தான் என் கணவர். என் மாமனாருக்கு பாத்தியமான 10 ஏக்கர் நிலத்தை ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் இறந்து விட்டார். அவர் இறந்த பிறகு அவருடைய 5 பிள்ளைகளும் வாய்மொழியாக பாகம் பிரித்து அனுபவித்து வந்தார்கள். தண்ணீர் இரைப்பது சம்மந்தமாகவும், பொது ஏர்கலப்பை சம்மந்தமாகவும் அடிக்கடி பிரச்சனை வந்தது என்றால் சரிதான்.

அடிக்கடி அவ்வாறு பிரச்சனை ஏற்படும் போது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அவர்களுக்குள் சமாதானம் ஏற்படும் என்றால் சரிதான். எனக்கு 3 பெண் பிள்ளைகள். பொது ஏர் என்பது 5 பேருக்கும் பொதுவானது தான். என் கணவர் பூவும் பறிப்பார், கூலி வேலைக்கும் செல்வார். எங்கள் முறைக்கு ஏர் கலப்பை வரும் போது நிலத்தில் உள்ள கொட்டாயில் வைத்திருப்போம். என்னுடைய வீட்டில் இருந்து கொட்டாய் 1/2 கி.மீட்டர் தூரத்தில் இருக்குமா என்றால் இருக்கலாம்.

பொது ஏர் கலப்பையை 2ம் எதிரி மணிகண்டன் எடுத்துச் சென்று விட்டார் என்றும், இரவு நேரம் என்பதால் பிரச்சனை வேண்டாம், மறுநாள் காலையில் பேசிக்கொள்ளலாம் என்று கூறியதாக என் புகாரிலும், போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் தினத்தன்று என் கணவரும், என் மகள்களும் பூப்பறிக்க சென்று விட்டு வந்து விட்டார்கள். என் கணவர் நான் வீட்டில் இருக்கும் போது ஏர்கலப்பையை கேட்கப்போவதாக சொல்லிவிட்டு சென்றார்.

மூங்கில் கொம்பிற்கும், சாதாரண கொம்பிற்கும் எனக்கு வித்தியாசம் தெரியும். நானும் என் கணவரும் கடந்த 27 வருடமாக விவசாயம் செய்து வந்தோம். மரத்தடி என்பது நீளமாகவும், மரக்கட்டை என்பது தடியாகவும் இருக்கும் என்றால் சரிதான். நான் புகாரை காலை 11.30 அல்லது 12 மணியளவில் காவல் நிலையம் சென்று கொடுத்தேன். புகாரை நான் சொல்லச் சொல்ல என் மகள்

நிரோஷா எழுதினாளா என்றால் நிரோஷா தான் எழுதினார். அந்த புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. என்னுடைய வீட்டில் இருந்து சங்கர் நிலத்தை நேரடியாக பார்க்க முடியாது.

சம்பவம் என்னுடைய நிலத்தில் நடந்ததாக என்னுடைய புகாரிலும், போலீசார் வாக்குமூலத்தில் என் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியாது. என்னுடைய வீட்டில் இருந்து காவல் நிலையம் 10 கி.மீட்டர் தூரம் இருக்குமா என்றால் தெரியாது. ஆனால் 30 நிமிடத்தில் சென்று விடலாம். என் கணவர் போனபோது நானும் என் பெண்களும் அவருடன் சென்றோம்.

1ம் எதிரியின் மகன் மணிகண்டன் 9.6.2018ல் மாலை 6.30 மணியளவில் ஏர்கலப்பையை எடுத்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் ஏர் கலப்பையை பார்த்தார் என்றும் மறுநாள் அது பற்றி கேட்கலாம் என்று போலீசார் விசாரணையில் சொன்னேன். என் கணவரை மூங்கில் கொம்பால் அடித்ததாக புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி சங்கர் மரக்கட்டையால் என் கணவரின் பின்தலையில் அடித்ததாக புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் கணவரின் வாயிலும், மூக்கில் இருந்தும் வாந்தி வந்ததாக சொல்லியுள்ளேன். என்னுடைய மூத்தார் ஏழுமலையை அங்குள்ள நபர்கள் போன் மூலம் வரச்சொன்னார்கள்.

அவர்1/4 மணி நேரத்திற்குள் வந்து விட்டார். அவர் வருவதற்கு 1 மணி நேரம் ஆகிவிட்டது என்றும், என் கணவர் 1 மணி நேரமாக அந்த இடத்திலேயே கேட்பாறற்று கிடந்தார் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் சுமார் 15 - 20 நபர்கள் இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் தேதியில் நானும் என் மகள்களும் பூப்பறிக்க சென்றோம் என்றால் சரிதான். ஆனால் திரும்பி வந்து விட்டோம். பூ மகசூல் அதிகமாக இருந்தால் நேரம் பிடிக்கும் என்றால் சரிதான். பூக்களை பறித்து பெங்களூருக்கு பஸ் மூலம் செல்லும் என்றால் சரிதான். எங்கள் வீட்டில் இருந்து பெங்களூர் கூட்டு ரோடு சாலை 1 கி.மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

சம்பவம் நடந்ததாக சொல்லும் காலகட்டத்தில் எதிரியின் நிலம் கரம்பாக இருந்தது. எங்கள் நிலத்தில் மிளகாய் நடவு நடப்பட்டு இருந்தது. சுமார் 20 செண்டிற்கு மிளகாய் போட்டு இருந்தோம். சங்கர் நிலம் முழுவதும் கரம்பாக இருந்தது என்று சொன்னால் சரிதான். பொது ஏர் கலப்பை என்பது இந்த காலகட்டத்தில் யாரும் உபயோகப்படுத்தாத ஒன்று என்றும், நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கும்பலில் ஏற்பட்ட தள்ளு முள்ளு காரணமாக என் கணவர் கீழே விழுந்து தலையில் அடிப்பட்டு இறந்து விட்டார் என்றால் சரியல்ல. ஏற்கனவே நிலத்தகராறு இருந்ததால் முன் விரோதத்தை பயன்படுத்தி ஒரு பொய் புகாரை கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசார் புகார் கொடுத்த பிறகு 2 வாரம் கழித்து என்னை விசாரணை செய்தார்களா என்றால் ஆம்.

ஒம்/- சாரதா

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**S.C. NO.159/2019**

**21.09.2023 - அ.சா. 2 நிரோஷா மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் தாத்தா பெயர் பச்சையப்பன். அவர் 15 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். அவருக்கு மொத்தம் 5 பிள்ளைகள் அதில் ஒருவர் தான் என் அப்பா. என் தாத்தாவிற்கு பாத்தியமான 10 ஏக்கர் நிலத்தை ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் இறந்து விட்டார். அவர் இறந்த பிறகு அவருடைய 5 பிள்ளைகளும் வாய்மொழியாக பாகம் பிரித்து அனுபவித்து வந்தார்கள். தண்ணீர் இரைப்பது சம்மந்தமாகவும், பொது ஏர்கலப்பை சம்மந்தமாகவும் அடிக்கடி பிரச்சனை வந்தது என்றால் சரிதான்.

அடிக்கடி அவ்வாறு பிரச்சனை ஏற்படும் போது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அவர்களுக்குள் சமாதானம் ஏற்படும் என்றால் சரிதான். 2018ல் நான் 12 வகுப்பு முடித்து விட்டு வீட்டில் இருந்தேன். 8.7.2019ல் எனக்கு திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு 6 மாதத்திற்கு முன்பு எனக்கு நிச்சயதார்த்தம் நடந்தது. நான் பெங்களூரில் என் கணவருடன் வசித்து வருகிறேன். சம்பவ நடந்ததாக சொல்லும் தேதியில் நானும் என் சகோதரிகளும், என் தாயாரும் பூப்பறிக்க சென்றோம் என்றால் சரிதான்.

சாதாரணமாக நாங்கள் பூப்பறிப்பது, விவசாயம் மற்றும் கறவை மாடு வைத்து பால் வியாபாரம் செய்வோம். 9.6.2018ந் தேதி ஏர் ஓட்டுவதற்காக அனைவருக்கும் பொதுவான ஏர்கலப்பையை என் தந்தை எடுத்து வந்து வீட்டில் வைத்திருந்தார் என்று நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சுமார் எத்தனை பேர் இருந்திருப்பார்கள் என்றால் சுமார் 10 பேர் இருந்து இருப்பார்கள். சண்டை ஏற்பட்டது என்றும், நான் அ.சா.1 மற்றும் எனது 2 சகோதரிகள் தடுக்க சென்றோம் என்றும், மணிகண்டன் என் தந்தை மற்றும் நிஷாந்தியை அடித்து கால்வாயில் தள்ளினார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நாங்கள் அனைவரும் அப்பாவுடன் வீட்டில் தான் இருந்தோம். அப்போது தான் நான் தடுக்க சென்றேன்.

மணிகண்டன் மூங்கில் கொம்பால் மண்டை பக்கவாட்டில் அடித்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு என்

அப்பாவும் அடித்ததால் ஆத்திரம் அடைந்த எதிரி சங்கர் என் அப்பாவின் பின் மண்டையில் தடியால் அடித்தாக போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் அதனால் என் அப்பாவிற்கு முக்கிலும், வாயிலும் வாந்தி வந்தது என்று குறிப்பிட்டுள்ளேன். ஏழுமலை போன் செய்து 10 - 15 நிமிடத்திலேயே வந்து விட்டார். என் அப்பா சுமார் 1 மணி நேரம் கேட்பாறற்று கிடந்தார் என்றும் அதன் பிறகு நாங்கள் என் அப்பாவை மருத்துவமனை அழைத்து சென்றோம் என்றால் சரியல்ல.

எங்கள் நிலத்தில் 20 செண்டு இடத்தில் மிளகாய் பயிர் செய்து இருந்தோம். சங்கர் நிலம் கரம்பாக இருந்தது. மூங்கில் கொம்பு, மரக்கட்டைக்கும், மரத்தடிக்கும் வித்தியாசம் தெரியும். எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் எங்கள் நிலம் உள்ளது. பக்கத்தில் சங்கர் நிலம் உள்ளது. எங்கள் வீட்டில் இருந்து சங்கர் நிலத்திற்கு நேரடியாக செல்ல முடியாது. சம்பவத்தை எங்கள் வீட்டில் இருந்து நேரடியாக பார்க்க முடியாது. என் தகப்பனாரை கொண்டு வந்தவர் ஏழுமலை என்று விபத்து பதிவேட்டில் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் விபத்து பதிவேட்டில் 4 தெரிந்த நபர்கள் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில், எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தைக்கும் அவரது சகோதரர்களுக்கும் எப்போது நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து கொண்டே இருக்கும் என்றும் அதனை சாதகமாக பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யான ஒரு புகார் கொடுத்து வழக்கு போட்டுள்ளோம் என்றும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. என் தந்தையை அரசு மருத்துவமனைக்கு காரில் அழைத்து சென்றோம் என்றும், அங்கு பரிசோதனை செய்து என் தகப்பனார் இறந்து விட்டதாக கூறியபிறகு என் தாயார் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகார் கொடுக்கும் போது என் தாயாருடன் நானும் காவல் நிலையம் சென்றிருந்தேன். நான் முதன்மை வாக்குமூலத்தில் சொன்னது தான் உண்மை என்றும், நான் என் தாயாருடன் காவல் நிலையம் செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

புகார் கொடுத்த அன்றே போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். பொது ஏர் கலப்பை என்பது இந்த காலகட்டத்தில் யாரும் உபயோகப்படுத்தாத ஒன்று என்றும், நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கும்பலில் ஏற்பட்ட தள்ளு முள்ளு காரணமாக என் கணவர் கீழே விழுந்து தலையில் அடிப்பட்டு இறந்து விட்டார் என்றால் சரியல்ல. ஏற்கனவே நிலத்தகராறு இருந்ததால் முன் விரோதத்தை பயன்படுத்தி ஒரு பொய் புகாரை கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- நிரோஷா

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**S.C. NO.159/2019**

**21.09.2023 - அ.சா. 3 நிஷா மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் தாத்தா பெயர் பச்சையப்பன். அவர் 15 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். அவருக்கு மொத்தம் 5 பிள்ளைகள் அதில் ஒருவர் தான் என் அப்பா. என் தாத்தாவிற்கு பாத்தியமான 10 ஏக்கர் நிலத்தை ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் இறந்து விட்டார். அவர் இறந்த பிறகு அவருடைய 5 பிள்ளைகளும் வாய்மொழியாக பாகம் பிரித்து அனுபவித்து வந்தார்கள். தண்ணீர் இரைப்பது சம்மந்தமாகவும், பொது ஏர்கலப்பை சம்மந்தமாகவும் அடிக்கடி பிரச்சனை வந்தது என்றால் சரிதான். அடிக்கடி அவ்வாறு பிரச்சனை ஏற்படும் போது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அவர்களுக்குள் சமாதானம் ஏற்படும் என்றால் சரிதான்.

2018ல் நான் திருவண்ணாமலை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு படித்துக் கொண்டு இருந்தேன். தினமும் பள்ளிக்கு தவறாமல் சென்று வருவேன். 2020ல் எனக்கு திருமணம் ஆகி தற்போது என் கணவருடன் ரெட்டியார் பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். என் வீட்டில் இருந்து நான் படித்த பள்ளி சுமார் 8 கி.மீட்டர் தூரத்தில் உள்ளது. சம்பவ நாள் அன்று எங்கள் வீட்டில் இருந்து 1 1/2 கி.மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள தோட்டத்திற்கு சென்று பூ பறித்துக்கொண்டு வந்தோம் என்றால் சரிதான். சம்பவத் தினத்தன்று பூ பறித்து விட்டு நாங்கள் வீட்டிற்கு வந்து விட்டோம். என் தகப்பனார் பெங்களூர் கூட்ரோடிற்கு சென்று பஸ்சில் பூவை கொடுத்து விட்டு வந்தார்.

பூவை கொடுத்து விட்டு என் தகப்பனார் ஏர்கலப்பை சம்மந்தமாக எதிரியிடம் கேட்கச் சென்றார். என் தகப்பனார் வேலை முடித்து விட்டு 8 மணிக்கு வந்ததாகவும், இரவு நேரம் என்பதால் கேட்கவேண்டாம் என்றும், மறுநாள் கேட்டுக் கொள்ளலாம் என்று என் தாயார் கூறியதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். மறுநாள் காலை 9 மணிக்கு என் தந்தையுடன் பூ பறித்து விட்டு நிலத்தை உழுவதற்கு ஏர் கலப்பை வாங்கி வர என் தந்தை மாட்டு தொழுவத்தில் வைத்திருந்த ஏர்கலப்பை எடுக்கச் சென்றார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மாட்டு தொழுவத்தில் இருந்து

ஏர்கலப்பை எடுக்கும் போது மணிகண்டன் ஏர் கலப்பையை ஏன் எடுக்கிறாய் என்று சொல்லி இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் சரிதான். இருவருக்கும் கைகலப்பு ஏற்பட்டது என்றால் சரிதான்.

என் தந்தைக்கும், 2ம் எதிரிக்கும் நடந்த வாக்குவாதத்தை விளக்கிவிட சென்றேன். 2ம் எதிரியும் அவரது தம்பியும் என்னை அடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன் பிறகு தான் என் தகப்பனாருக்கும், எதிரிக்கும் கைகலப்பு ஏற்பட்டது. மேலும் போலீசார் விசாரணையில் என் தகப்பனார் ஏன் என் மகளை அடிக்கிறாய் என்று கேட்டதற்கு நான் அப்படி தான் அடிப்பேன் என்று கூறி மணிகண்டன் மூங்கில் கொம்பால் என் தந்தையில் மண்டை பக்கவாட்டத்தில் அடித்ததாக கூறியுள்ளேன். பெரிய மரக்கட்டையால் என் தந்தையின் பின் மண்டையில் ஓங்கி அடித்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

மணிகண்டனின் தம்பி பெயர் விக்னேஷ். சம்பவம் நடந்த இடத்தில் எதிரி குடும்பத்தாறும், நாங்கள் சேர்ந்து சுமார் 15 பேர் இருப்போம். என் அப்பாவிற்கு மூக்கிலும், வாயிலும் பச்சை நிறத்தில் வாந்தி வந்தது என்று குறிப்பிட்டுள்ளேன். என் அடித்த பிறகு தான் என் அம்மாவும், அக்காளும் வந்தார்கள் என்றால் சரியல்ல. ஆரம்பத்தில் இருந்தே அவர்கள் அங்கு தான் இருந்தார்கள். என் பெரியப்பா ஏழுமலைக்கு சம்பவம் நடைபெற்ற பிறகு போன் போட்டு யார் சொன்னார்கள் என்று தெரியாது நான் சொல்லவில்லை. அவர் வரும் வரை என் அப்பா கீழேயே கிடந்தார். அப்போது நானும் என் தாயாரும் சகோதரிகளும் தண்ணீர் கொடுத்து என் தகப்பனாரை பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல பார்த்தோம். என் பெரியப்பா வருவதற்கு 30 நிமிடம் ஆகியிருக்குமா என்றால் 20 நிமிடத்தில் வந்து விட்டார்.

என் தந்தையை அரசு மருத்துவமனைக்கு காரில் அழைத்து சென்றோம் என்றும், அங்கு பரிசோதனை செய்து என் தகப்பனார் இறந்து விட்டதாக கூறியபிறகு என் தாயார் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து திருவண்ணாமலை அரசு மருத்துவமனை சுமார் 20 கி.மீட்டர் இருக்கும் என்றால் சரிதான்.

ஒரு மணி நேரத்திற்குள் நாங்கள் அரசு மருத்துவமனைக்கு வந்து விட்டோம். சண்டை சுமார் 1/2 மணி நேரம் நடந்திருக்கும் என்றால் சரிதான். திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் இருந்து தாலுக்கா காவல் நிலையம் சுமார் 6 கி.மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். எங்கள் வீட்டில் இருந்து சங்கா நிலத்தை நேரடியாக பார்க்க முடியாது என்றால் சரிதான். எங்கள் வீட்டில் இருந்து 500 மீட்டர் தூரத்தில் எதிரியின் நிலம் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியில் சங்கரின் நிலம் காலியாகத்தான் இருந்தது. மருத்துவமனையில் என் தகப்பனாரை சேர்க்கும் போது மருத்துவ பதிவேட்டில் தெரிந்த 4 நபர்கள் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 4 பேர் தாக்கியதாக நான் மருத்துவரிடம் சொல்லவில்லை.

கும்பலில் ஏற்பட்ட தள்ளு முள்ளு காரணமாக என் கணவர் கீழே விழுந்து தலையில் அடிப்பட்டு இறந்து விட்டார் என்றால் சரியல்ல. ஏற்கனவே நிலத்தகராறு இருந்ததால் முன் விரோதத்தை பயன்படுத்தி ஒரு பொய் புகாரை கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசார் சம்பவ நடந்த மறுநாள் என்னை விசாரணை செய்தார்கள் மீண்டும் 10 நாள் கழித்து விசாரணை செய்தார்கள்.

ஒம்/- நிஷா

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.
## S.C. NO.159/2019

**21.09.2023 - அ.சா. 5 சாந்தி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் வசிக்கும் இடத்தில் இருந்து சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் கூப்பிடும் தூரத்தில் அமைந்துள்ளது. நடுவில் வீடுகள் உள்ளன. ஏர் கலப்பை பிரச்சனை சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது. இறந்து போன தேவேந்திரன் எதிரியின் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுப்பார். அவர்களுக்குள் ஏதாவது ஒரு பிரச்சனை இருந்து வரும் என்றால் சரிதான். நான் தேவேந்திரனுக்கு தண்ணீர் கொடுத்தேன். ஏழுமலைக்கும் போன் செய்தேன். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், எதிரி எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் வீடு அருகாமையில் தான் உள்ளது. தண்ணீரை என் வீட்டில் இருந்து கொண்டு வந்து கொடுத்தேன். அப்போது அவர் குடிக்கவில்லை. முகத்தில் தண்ணீர் தெளித்தேன்.

ஓம்/- சாந்தி

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.